பக்கங்கள் ஆறு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 02 திங்கட்கிழமை ( 18-9-2000 ) தொ. பேசி; 3378 ஒலி: 273

★ புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள சாவகச்சேரியில்

# புலிகள்-இராணுவத்திற்குமிடையில் கடுமையான சண்டை தொடர்கிறது!

## அதிகாரி உட்பட 4 இராணுவம் பலி; 43 பேர் காயம்

[நமது நிருபர்]

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சாவகச்சேரிப் பகுதியை மீட்கும் படை நகர்வொன்றை இராணுவத்தினர் நேற்றுக் காலை மேற்கொண்டபோது, மூண்ட கடுமையான சண்டையில் ஒரு இராணுவ அதிகாரியும் மூன்று இராணுவ சிப்பாய்களும் கொல்லப் பட்டதாகவும்மூன்று அதிகாரிகளும் 43 இராணுவத்தினரும் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது, விடுதலைப்புலிகள் தரப்பில் ஏற்பட்ட சேத விபரம எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை புத்தூர் சந்தியிலிருந்தும் சாவகச்சேரி பகுதியை நோக்கி இரண்டாவது நாளாக நேற்றும் முன்னேறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சாவகச்சேரிப்பகுதியையும் அதனை அண்டியுள்ள பகுதிகளையும் புலிகளிடம் இருந்து மீட்பதற்கு நேற்றுக் காலை இராணுவ நடவடிக்கையொன்றை இராணுவம் ஆரம்பித்துள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கைக்கு உதவியாக வான் பரப்பில் உலங்கு வானூர்திகளும் 'மிக்' ரகயுத்த குண்டு வீச்சு விமானங்களும், வலி

(6ஆம் பக்கம் பார்க்க)

## "ஷெல்" வீச்சுக்கு 7 பிள்ளைகளின் தந்தை படுகாயமடைந்தார்

சிறுப்பிட்டிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் குடும்பஸ்தவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை சிறுப்பிட்டியை அண்டிய பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போதே இந்தச் ஷெல் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தூரைச்சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தந்தையான ஐஸ்பழ வியாபாரி வி. வைகுந்தராஜா (வயது 48) என்பவரே ஷெல் வீச்சுக்கு இலக்காகி காயமடைந்தவராவார். (வ- 12

## அரைக்கம்பத்தில் தேசியக்கொடி

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான அஷ்ரப்பின் திடீர் மறைவு குறித்து அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று திங்கட்கிழமை அரச அலுவலகங்களில் ''தேசியக்கொடி'' களை அரைக் கம்பத்தில் பறக்கவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது. (4)

## "லங்காமுடித்த" பயணிகளுடன் இன்று புறப்படும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கான ''லங்கா முடித்த'' பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது.

இக் கப்பலில் பயணம் செய்வதற்கான பயண அனுமதி பெற்றவர்கள் இன்று காலை 7-00 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமூகமளிக்குமாறு சிவில் நிர்வாகக் காரியாலயம் மேலும் அறிவித்துள்ளது. (வ-4)

## அஷ்ரப்பின் மரணத்தில் சந்தேகம் பேரியல் ஜனாதிபதிக்கு கடிதம்

அமைச்சர் அஷ்ரப் பயணம் செய்த எம்.ஐ.24 ரக ஹெலி விபத்துக்குள்ளானதில்சூழ்ச்சி இருப்பதாக சந்தேகம் நிலவுவதால் உடனடியாக விசாரணை ஒன்றை மேற் கொள்ளுமாறு அமைச்சர் பேரியல் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

அமைச்சர் அஷ்ரப்பையும் அவரது குழுவையும் ஏற்றிச் சென்ற ஹெலி நடுவானில் சென்றபொழுது வெடிச்சிதறிச் சேட்டதாகவும்,

கொல்லப்பட்ட சடலங்கள் ஆங்காங்கே சிதறிக் கிடந்ததாலும் இவ் விபத்தில் சந்தேகம் இருப்பதாக அமைச்சர் பேரியல் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## ஹெலி விபத்து பற்றி ஆராய முத்தரப்பு விசாரணை

ஹெலி விபத்தில் கொல்லப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் மரணம் தொடர்பாக முத்தரப்பு விசாரணைகளை மேற்கொள்ள அரசு உத்தரவிட்டுள்ளது.

இம்முத்தரப்பு விசாரணைகளை விமானப்படை அதிகாரிகள், பொலிஸார், குற்றப்புலனாய்வு பிரிவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

இதேவேளை நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்கள் தற்போது விபத்து நடந்த இடத்தில் சீரற்ற காலநிலை காணப்படுவதால் உடனடியாக அங்கு செல்ல முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

★ ஈ. பி. ஆர். எல். எவ் வரதர்- சுரேஷ் அணிக்கிடையில்

## மோதல்கள் வெடிக்கும் அபாயம் மக்கள் மத்தியில் பீதி; அச்சம்!

(வவுனியா)

ஒக்ரோபர் மாதம் 10-ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கு முன்பு வவுனியாவில் ஈ. பி ஆர். எல். எவ். வரதர், சுரேஷ் அணிகளுக் இடையே கடும் மோதல் வெடிக்கும் அபாயம் நிலவுவதாகவும்இதனால்மக்கள் அச்சம் கொண்டிருப்பதாகவும் வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வரதர் - சுரேஷ் அணிகள் ஆரம்பத்தில் அறிக்கைகள் மூலம் ஒருவரை ஒருவர்சாடி வந்ததைவிட்டு தற்பொழுது ஒருவர்மீது மற்றவர் தாக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

★ தெல்லிப்பழைப் பகுதியில்

## பங்கர்கள் தகர்ப்பு வீடுகள் பலத்த சேதம்!

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைப் பகுதியில் நிலத்துக்கடியில் உள்ள பங்கர்களை இராணுவம் தகர்த்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தெல்லிப்பழை காசிப் பிள்ளையார் கோவிலுக்கருகாமையில் உள்ள சூரியர் என்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப்பின் இழப்பு ஈடு செய்யமுடியாதது கூட்டணித் தலைவர் சங்கரி கவலை

[யாழ்ப்பாணம்]

இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும்' அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப்பின் திடீர் மறைவு குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி அதிர்ச்சியும், ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துள்ளது.

[6ஆம் பக்கம் பார்க்க)

★ அரசியல் வரலாற்றில்

## நெருப்பாற்றைக் கடந்த தலைவர் அஷ்ரப்பின் மறைவுக்கு டக்ளஸ் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான அஷ்ரப்பின் திடீர் மறைவு குறித்து ஈ.பி.டி.பி. யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துள்ளார்.

[6ஆம் பக்கம் பார்க்க]

## அஷ்ரப்புடன் இனந்தெரியாத இருவர் பயணம் செய்தனரா?

### விபத்து குறித்த சந்தேகம் வலுக்கிறது

(கொழும்பு)

அமைச்சர் அஷ்ரப் பயணம் செய்த ஹெலிகொப்டரில் இனந்தெரியாத இருவர் பயணம் செய்ததாகத் தற்போது செய்திகள் வெளிவந்துள்ளன.

ஹெலியில் ஏறிய அஷ்ரப் இனந்தெரியாத இருவரையும் பார்த்துவிட்டு மற்றவர்களிடம் இவர்கள் யாரெனக் கேட்டதாகவும் அதற்கு இருவரும் கதிர்காமத்தம்பியின் ஆதரவாளர்களெனப் பதிலளிக்கப்பட்டதாகவும் ஹெலி புறப்படுவதற்கான ஏற்பாடுகளை ஒழுங்கு செய்த விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்:

குறித்த ஹெலிகொப்டரில் பிரமுகர்களே பயணம் செய்வதாகவும் அன்றைய தினம் அது அஷ்ரப்பின் பெயரில் பதிவு செய்யப்பட்டு பயணத்திற்குப் பயன்படுத்தப்பட்டதால் அதில் பயணம் செய்பவர்களின் பெயர்விபரங்கள் பதிவு செய்யப்படவில்லையென விமானப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை அஷ்ரப்பின் மரணத்தில் தமக்கு சந்தேகம் உள்ளதாக ஜனாதிபதிக்கு எழுதியுள்ளதாக கடிதத்தில் தெரிவித்துள்ளார். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வரி விளம்பரம்

### தேவை

இணுவிலில்இயங்கிக்கொண்டிருக்கும் ஆடை தைக்கும் தொழிற்சாலைக்கு மேற்பார்வையாளர், வெட்டுபவர், தைப்பவர், பிறா தைப்பவர், பூப்போடுபவர்கள் தேவை: இடம் பெயர்ந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். சகல விபரங்களுடனும் 20-09-2000 முன் விண்ணப்பிக்கவும்; விளம்பர இலக்கம் 110, வலம்புரி இல-15வெள்ளாந்தெரு, யாழ்பாணம்: [இ/786]

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐஸ்கிறீம், கம்பனிக்கு ஐஸ்பழம், ஐஸ்கிறீம், விற்பனைக்கு சயிக்கிள், வான், வியாபாரிகள் உடன் தேவை தொடர்பு ஸ்ரீ முருகன் தொலைபேசி தொடர்பகம் நீர்வேலி தெற்கு, கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி, T P No: 070 -212354, 070-212383, 070-212803 [1740]

### தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள ''வசந்தம் மருந்தகத்திற்கு'' மருந்து வியாபாரத்தில் இரண்டு வருட அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் உடன் தேவை. 27-09-2000க்கு முன் விண்ணப்பிக்கவும். ''வசந்தம் பார்மசி'' 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (1741)

# வீதி திருத்தப்படாததனால் மாணவர், மக்கள் பெருஞ்சிரமம்

(அரியாலை)

யாழ்; கன்னாதிட்டி வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது; இதனால் இவ் வீதியினூடாகப் பயணம் செய்வோர் பெருஞ்சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்;

சம்பந்தப் பட்டவர்கள் இதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளாதிருப்பது பற்றி பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கஸ்தூரியார் வீதியையும் மணிக்கூட்டு வீதியையும் இணைக்கும் இவ் வீதியையே மாணவர்கள் பெரிதும் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது; (செ- 106)

# தரமான மருந்து வகைகள் வன்னியில் போதியளவு இல்லை

## வைத்திய அதிகாரி தெரிவிப்பு

வன்னியில் தீவிரமாகப் பரவி வரும் மலேரியா நோயைக் கட்டுப்படுத்துவ

### கண்டெடுக்கப்பட்டது

துன்னாலை மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்தசிதம்பரி பாலசுப்பிரமணியம் என்பவரின் விசேட அ. அட்டை கண்டெடுக்கப் பட்டு ''வலம்புரி'' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அலுவலக நேரத்தில்பெற்றுக் கொள்ளவும்; (ந)

கூடிய மருந்துகள் பாவனையில் இல்லை என முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில்; மேற்படி நோயின் தாக்கத்தை குறைப்பதற்கு ஏற்கனவேபயன்படுத்தப்பட்டு வந்தமலத்தின் மருந்துகளிற்கு நுளம்புகள அழிக்கப்பட்டுவிட்டனஇம்மருந்துகளோ அல்லது தென்பகுதியில் பயன்படுத்தப்படும் உயர்ரக நுளம்பு ஒழிப்பு மருந்துகளோ வன்னிக்கு உரிய காலத்தில், போதுமான அளவு அனுப்பப்படுவதில்லை என தெரிவிக்கப்படுகிறது. (க-க)

தற்கு உயர்ரக வினைத்திறன்


**ஸ்ரீ செல்வா**

[யாழ்ப்பாணம்]

10. 30 2;00மணிக்கு

லிவிங்ஸ்ரன் நடித்த

**"அதே மனிதன்"**

மர்மச்சித்திரம்

புதிய வெளியீடு


# தேர்தல் அலுவலர்க்கு அறிவுறுத்தல்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலின் போது தபால்மூல வாக்களிப்பிற்கான அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 20ம் திகதி காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளதாக உதவி தேர்தல் ஆணையாளர் எஸ். நடராஜா தெரிவித்துள்ளார்.

மேற்படி அறிவுறுத்தல் கூட்டம் சம்பந்தமாக சகல அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும். அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி உதவித் தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார்; (ந-3)

# பொதுமக்கள் நம்பிக்கை

(இணுவில்)

ஈவினை கற்பகப்பிள்ளையார் கோவிலடி மற்றும் அதனைச் சார்ந்த பகுதிகளில் மின் கம்பி இணைக்கும் வேலைகளில் மின்சார சபையினர் துரிதமாகஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இதன் மூலம் ஈவினை மற்றும் புன்னாலைக் கட்டுவன் பகுதிகளுக்கு மிகவிரைவில் மின்சாரம் கிடைக்கும் என அப்பகுதி பொதுமக்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (உ-49)

# கட்டுத்துவக்கு வெடித்து பெண் காயம்

(வவுனியா)

கிளிநொச்சிகனகாம்பிகைப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 6 மணி அளவில் காலைக் கடன்கழிக்க சென்ற ஐந்து பிள்ளைகளின் தாயார் கட்டுத் துவக்கு வெடித்ததில் இடது காலில் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஐயாச்சாமி ரீற்றா (வயது 41) என்ற பெண்ணே காயமடைந்தவர் ஆவார். (க)

# இராசி பலன்

18/ 09 / 2000

(பூரட்டாதி 2, திங்கள்)

பஞ்சமி- மு. இ10.43 வரை

பரணி- பி.ப 1.50 வரை

இராகுகாலம்

7.33-9.03

சுபநேரம் -12.03- 1.33

கார்த்திகை விரதம்

**மேடம்**
காரிய அனுகூலம், புதியசிந்தனை, ஆரோக்கியம்.

**இடபம்**
அலைச்சல், காரிய தாமதம், வீண்செலவு, இரோகம்.

**மிதுனம்**
நினைத்த காரியம்கைகூடும் பணவரவு, மங்களமான காரியம்.

**கடகம்**
காரிய நன்மை, தொழில் விருத்தி, அறிஞர் சந்திப்பு.

**சிங்கம்**
பிரயாணம், உறவினரால் பயம், வியாதி.

**கன்னி**
சத்துருபயம், பிரயாண அலைச்சல், காரியத் தடை.

**துலாம்**
பிரயாணம், வருமானம், விருந்துண்ணல், களஸ்திர சுகம்,

**விருச்சிகம்**
புதிய செய்தி, நோய்குணமடைதல், முயற்சி பலிதம்.

**தனுசு**
காரிய ஜெயம், பணவரவு. குடும்பத்தில் கலகம்.

**மகரம்**
சுகக்குறைவு, மனக்கிலேசம், நம்பிக்கையின்மை.

**கும்பம்**
பிரயாணம், இளை சகோதரர் உதவி, குடும்பசுகம்.

**மீனம்**
வாக்குக் கலகம். காரிய தாமதம், இலட்சுமிகரம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## பருத்தித்துறை பிரதேசசபை

# கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், இதற்கான தகுதியினை உரிய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். அதற்கான கேள்விப் படிவங்களை பின்வரும் விகிதங்களில் வைப்புப் பணத்தையும் படிவப் பணத்தையும் செலுத்தி 26-09-2000 பி. ப 3. 30 மணி வரை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் 27-09-2000 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். 27-09-2000 ஆம் திகதி பி. ப 1-30 மணிக்குத் திறக்கப்படும். 01 தொடக்கம் 06 வரையான வேலைகளுக்கு ஓர் ஒப்பந்தகாரர் அல்லது ஒரு சங்கம் மூன்று கேள்விகள் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

### அட்டவணை

| வேலை விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் | மீளளிக்கக் கூடியவைப்பு |
|---|---|---|
| 01. குடத்தனை கரிக்கோப்பு வீதி திருத்தம் | 100. 00 | 2000. 00 |
| 02. குடத்தனை கிராமக்கோடு வீதி திருத்தம் | 100. 00 | 1500. 00 |
| 03. மணற்காடு மீன் சந்தை அமைத்தல் | 100. 00 | 1500. 00 |
| 04. பொற்பதி மீன் சந்தை அமைத்தல் | 100. 00 | 2000. 00 |
| 05. வல்லிபுரம் திறந்த கிணறு அமைத்தல் | 100. 00 | 1000. 00 |
| 06. அல்வாய் மேற்கு மாதாகோவில் வீதி திருத்தம் | 100. 00 | 1500. 00 |
| 07. குடத்தனை குளவெளி தாமரைக் குளம் திருத்தம் | 100. 00 | 500. 00 |
| 08. புலோலிப்பகுதியில் மூன்று குழாய்க் கிணறுகள் புனரமைத்தல் | 100. 00 | 500. 00 |
| 09. மாயக்கை குளம் புனரமைப்பு | 100. 00 | 500. 00 |
| 10. புளியங்காயன் குளம் புனரமைப்பு | 100. 00 | 500. 00 |
| 11. சுப்பர்மடம் மயானம் புனரமைப்பு | 100. 00 | 300. 00 |
| 12. சுப்பர்மடம் பொது மலகூடம் அமைத்தல் | 100. 00 | 500. 00 |

கேள்விகள் யாவும் அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு தலைவர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமோ அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ குறித்த திகதியின் முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும்; கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விபரங்களை காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்;

ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே. பி. யு. எம்.
தலைவர்
பருத்தித்துறை பிரதேசசபை

பருத்தித்துறை பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
18-09-2000

(இ-797)

# பாராளுமன்றத் தேர்தல் 10-10-2000

அஞ்சல் வாக்குச் சீட்டுகள் வழங்கும்போது சமுகமளிப்பதற்கு

## முகவர்களை நியமித்தல்

மேற்படி விடயம் தொடர்பான நிகழ்வு 18-09-2000ம் திகதிக்குப் பதிலாக 19-09-2000ம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 9-00 மணிக்கு இடம்பெறும் என்பதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

தெரிவத்தாட்சி அலுவலர்
தேர்தல் மாவட்ட இல. 10
யாழ்ப்பாணம்.

(இ/798)


இலவச சிகிச்சையும்
மருத்துவ ஆலோசனையும்.

**New Lant Clinic**

(நியூலான்ட் கிளினிக்)

மெடிலான் ஆங்கில மருந்து நிறுவனம் அருகில்

பிரதான வீதி, சங்கானை.

10-9-2000முதல் 10-10-2000 வரை

M. B. B. S. டாக்டர்களினால் தினமும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை இலவச சிகிச்சையும் மருத்துவ ஆலோசனையும் பெற்றுக் கொள்ளலாம்

[இ/778]

## இன்று ஒரு தகவல்

### தந்திரப் பேச்சை நம்பினால் தத்தளிக்க நேரிடும்

ஒரு காட்டில் கரடி சென்று வசித்து வந்தது. அந்தக் கரடியின் பெயர் கனகராஜ். அதனிடம் ஒரு நரி வேலை செய்து வந்தது. அந்த நரியின் பெயர் நாகராஜ்.

கனகராஜ் ஒரு நாள் தனது நண்பன் சிறுத்தை சிவராஜை தனது வீட்டில் விருந்து உண்ண அழைத்தது. சிறுத்தை சிவராஜ் தான் வழமையாக தூக்கித்திரியும் கைப்பையுடன் கரடி கனகராஜ் வீட்டிற்கு வந்தது.

தனது நண்பனுக்காக இரண்டு முயல்களை பிடித்து வந்து நரி நாகராஜிடம் கொடுத்து சமையல் செய்யச் சொன்னது கரடி கனகராஜ்.

நரி நாகராஜ் சமையல் செய்யத் தொடங்கியது. கரடி கனகராஜ ஏதோ ஒரு அவசர வேலை இருந்த படியால் தன் நண்பனை அங்கே இருக்கும்படி கூறிவிட்டு வெளியே சென்றது.

கரடி கனகராஜ் வரும் வரையில் அங்கேயே காத்திருந்தது சிறுத்தை சிவராஜ். சமயல் செய்து கொண்டிருந்த நரி நாகராஜ் 'ருசி' பார்ப்பதற்காக இறைச்சியில் ஒரு துண்டை கடித்தது மிகவும் சுவையாயிருந்தது. இறைச்சி சுவையாயிருந்ததால் அதன் நாவில் எச்சில் ஊறியது. அதன் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் மெதுவாக ஒரு முயலைத் தின்றது. அது மிகவும் சுவையாயிருக்க இரண்டாவது முயலையும் தின்று தீர்த்தது நரி நாகராஜ்.

தனது முதலாளி வந்தால் என்ன பதில் சொல்வது என்று நினைத்த போது நரி நாகராஜிற்கு உதறல் எடுத்தது. என்ன செய்வதென்று யோசித்த போது அதற்குதன் நரிமூளை தோன்றியது.

வெளியில் உட்கார்ந்திருக்கும் சிறுத்தை சிவராஜிடம் மெதுவாக பேச ஆரம்பித்தது நரி நாகராஜ்.

'ஐயா! எனது முதலாளி உங்களை கூப்பிட்டதே உங்களுடைய காது இரண்டையும் கடித்து உண்பதற்காகத்தான். அவர் கூரான கத்தி வாங்கத்தான் வெளியேபோயிருந்தார் உங்களுடைய காதைத் தின்றால் அவருடைய வயிற்று வலி குணமாகிவிடும் என்று மருத்துவர் சொன்னாராம்'' என்று சொன்னது நரி நாகராஜ்.

'அடப்பாவி! இதற்காகவா என்னை வரவழைத்தான்? இனிமேல் இந்தப் பக்கம் வரவே மாட்டேன்' என்றபடி தனது பையைத் தூக்கிக் கொண்டு சென்றது சிறுத்தை சிவராஜ்.

சிறுத்தை சிவராஜ் தலை தெறிக்க ஓடுவதை, வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்த கரடி கனகராஜ் கண்டது. அது நேராக நரி நாகராஜிடம் ஓடிவந்து என்ன என்று விசாரித்தது.

'சமைத்த இரண்டு முயல்களையும் தூக்கிக்கொண்டு ஓடுகிறது:' என்று சொன்னது நரி. இதைக் கேட்ட கரடி கனகராஜ். சிறுத்தை சிவராஜிற்கு பின்னால் ஓடியபடி அதனிடம், 'ஒன்றையாவது தந்துவிட்டுப் போ!' என்று கேட்டது.

கரடி கனகராஜ் தன் காதைத் தான் கேட்கிறது என நினைத்து சிறுத்தை சிவராஜ் தனது காதுகளை மூடியபடி என்னால் தர முடியாது எனக்கு இரண்டும் வேண்டுமென்று கூறி ஓடிமறைந்தது.

தன் முதலாளியையும் அவரது நண்பனையும் ஏமாற்றி தப்பியது நரி நாகராஜ்.

பால் என்று நம்பி ஏமாறக் கூடாது. இன்று நல்லவர்கள் நாளை தீயவர்களாகலாம், தீயவர்கள் நல்லவராகலாம். ஆனால் தந்திரப் பேச்சுக்கு ஆளானால் எல்லாவற்றையும் இழந்து கரடியினைப் போல் நிற்கவேண்டும்.

— பாப்பா முரசு —

# சீநோர் வலைத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

## ஈ. பி. டி. பி. செயலரிடமும் முறையீடு

(தென்மராட்சி)

குருநகரிலுள்ள சீநோர் வலைத்தொழிற்சாலையை உடனடியாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரும்படியும், வலை உற்பத்திக்குத் தேவையான இரசாயனப்பொருட்களைக் கொழும்பில் இருந்து கொண்டு வருவதற்குமான பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுத்தரும்படியும் குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையின் ஊழியர்கள் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் ஈ.பி.டி.பியின் பாராளுமன்ற உறுப்பினருமாகிய டக்ளஸ் தேவானந்தாவிடம் கடந்த வெள்ளியன்று நேரில் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்கள் அதன் தலைவர் ஏ.ஜே. அன்ரசன் தலைமையில் ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரிடம் மேலும் கேட்டுக்கொண்டதாவது

இத்தொழிற்சாலையில் கடமையாற்றிய 113 பேருக்கு சேவை நிறுத்தம் இல்லாமல் முழுமையான சம்பளம் வழங்கப்படல் வேண்டும் எனவும் வலைத் தொழிற்சாலையின் முன்பு மாவட்ட பொது முகாமையாளராகக் கடமையாற்றிய எஸ். கஜமுகலிங்கத்தை தொழிற்சாலையின் வளர்ச்சிகருதி மீண்டும் அதே பதவியில் நியமிக்கும்படி கேட்டுக்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் கொழும்பிலுள்ள சீநோர் நிறுவனத்துடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு அபிவிருத்திச் சபையின் வேண்டுகோள்களையுக் கோரிக்கைகளையும் தெரியப்படுத்தியுள்ளார் எனத்தெரிய வருகின்றது.

அதேவேளை இத் தொழிற்சாலைவிவகாரம் தொடர்பாக இம் மாதம் 20ம் திகதிக்குள் ஒரு சாதகமான நடவடிக்கையை ஏற்படுத்துவதாக டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்திருந்தார் எனத்தெரியவருகின்றது.

(77)

### கரவெட்டி சுற்றிவளைப்பு

(கரவெட்டி)

கரவெட்டிப் பகுதி, நேற்று இராணுவத்தினரின் திடீர் சுற்றிவளைப்புக்கு உள்ளாக்கப்பட்டது.

அதிகாலை முதல் வீடு வீடாகச்சென்ற இராணுவத்தினர் 10 வயதிற்கும் 50 வயதிற்கும் இடைப்பட்ட வயதினரை கடும் சோதனை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கியதாகவும் தெரியவந்துள்ளது.

(உ-41)

### பயிர்ச்செய்கை

(இணுவில்)

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நீண்டகாலமாக கைவிடப்பட்ட நிலையில் தரிசு நிலங்களாக காணப்பட்ட தோட்ட நிலங்களை மீண்டும் பயிர் செய்வதற்கு உகந்ததாக மாற்றும் முயற்சியில் சம்பந்தப்பட்டோர் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், தோட்டப் பகுதியில் கல் அகழ்வு நடவடிக்கையிலும் விவசாயிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

(உ-49)

### சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியூடாக இலங்கை வங்கியில் வேலை வாய்ப்பிற்காக விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 20ம், 21ம் திகதிகளில் சகல ஆவணங்களுடனும் மேற்படி அலுவலகத்திற்கு சமுகந் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (செ)

## அரியாலை - நெடுங்குளம் வீதிப்பகுதி மக்கள் இன்று வீடுகளை பார்வையிடலாம்

### படையினர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

அரியாலை நெடுங்குளம் வீதியின் மேற்குப் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் இன்று தமது வீடுகளை பார்வையிட அனுமதிக்கப்படவுள்ளனர்.

அரியாலை, மற்றும் கொழும்புத்துறையைசேர்ந்த இடம் பெயர்ந்த மக்களே நேற்றுத் தொடக்கம் கட்டம் கட்டமாக தமது வீடுகளை பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

வீடுகளை பார்வையிடுவோரில் குடும்பத்தலைவர் அல்லது தலைவியுடன் உதவியாளர் செல்லலாம் என்றும் இளம் வயதினர் அனுமதிக்கப்படமாட்டார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு இருபத்தைந்து குடும்பங்களுக்குரிய உறுப்பினர்களே கட்டம் கட்டமாக அனுமதிக்கப்படவுள்ளனர்.

இதன் படி அரியாலை முள்ளிப் பகுதிவரை மக்கள் சென்று தமது முக்கிய உடைமைகளை மீட்டுவருவதற்கான ஒழுங்குகள் செய்யப்படும் என்று இடம் பெயர்ந்த மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேற்படி பகுதிகளுக்கு செல்லவிருக்கும் பொதுமக்கள் ஆடியபாதம் வீதி, இல. 64 எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை பதிவு செய்ய வேண்டும்.

பின்னர் அரியாலை மாம்பழம் சந்தியில் ஒன்று சேர்ந்து அங்கிருந்து தத்தமது வீடுகளை பார்வையிடச் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தபால் கட்டைச் சந்தியிலிருந்து நெடுங்குளம் வீதிவரை வசிப்பவர்களே இவ்வாறான நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்றும் அரியாலை மாம்பழம் சந்திக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்தவர்கள் இவ்வாறான நடைமுறையை பின்பற்ற வேண்டிய தேவை இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரியாலை, கொழும்புத்துறை பகுதி மக்கள் பிரதிநிதிகளுக்கும் - படையினருக்கும் இடையில் அண்மையில் ஈ.பி.டி.பி. அமைப்பினரின் ஆதரவுடன் ஏற்பட்ட சந்திப்பையடுத்தே மேற்படி இணக்க நிலை ஏற்பட்டதாக தெரிகிறது. (க-3)

## பௌதிக விஞ்ஞானபீட முதலாம் வருட பரீட்சை முடிவுகள் அடுத்தவாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, பௌதிக விஞ்ஞான பீட முதலாம் வருட பரீட்சை முடிவுகள் அடுத்தவாரம் வெளியிடப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டாம், மூன்றாம் வருடத்திற்குரிய பரீட்சை முடிவுகள் ஏற்கனவே வெளியாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (க-3)

## மட்டக்களப்பில் நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களின் மரணத்தை யொட்டி நேற்று மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசங்களில் வர்த்தக நிலையங்கள், பொதுச்சந்தை, ஸ்தாபனங்கள் அனைத்தும் மூடப்பட்டு பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று முற்பகல் காத்தான்குடி மூகைதீன் மெத்தைப் பள்ளிவாசலில் சுமார் 10 ஆயிரம் முஸ்லிம்கள் ஒன்று கூடி அமைச்சரின் ஆத்மசாந்திக்காக பாரிய பிரார்த்தனையிலீடுபட்டதுடன், விஷேட ஜனாசா தொழுகையும் நடத்தினர்.

(சு-60)

## கொம்மாந்துறை மோதலில் ஒருவர் பலி; இருவர் காயம்

கடந்த வெள்ளிக்கிழமை கொம்மாந்துறை தீவுப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில், ஒரு படைவீரர் மற்றும் இரு பொதுமக்கள் காயமடைந்தனர்.

இச் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்திருப்பதாக படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த வெள்ளி இரவு 7.45 மணியளவில், செங்கலடி இராணுவ முகாமைச் சேர்ந்த படையினர் கொம்மாந்துறைத் தீவுப்பகுதியில் பதுங்கியிருந்த போது அப்பாதையூடாக வந்த விடுதலைப் புலி உறுப்பினர்களுடன் மோதல் மூண்டதாக தெரியவந்துள்ளது. (உ)

## பிரதி சபாநாயகருக்கு பிரியாவிடை

பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் அனில் முனசிங்காவுக்கு நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் வைத்து பிரியாவிடைவழங்கப்பட்டது.

வெளி நாடுகளிற்குத் தூதுவராகச் செல்லவுள்ள அனில் முனசிங்கா இம்முறை தேர்தலில் போட்டியிடாததனால் அவருக்கு எம்பிக்களால் இப் பிரியாவிடை வழங்கப்பட்டது.

கடற்றொழிலாளர்களின்
தொழில் நேரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்
உபகரணங்கள் அதிகரித்தளவில் கிடைக்கக்கூடிய வகையில்
தடைகள் அகற்றப்பட வேண்டும்
சகல பிரதேசங்களிலும் மீன்பிடிக்கவும்தரகர்களின் ஆதிக்கத்தை
இல்லாதொழிக்கவும் போராட வேண்டும்
இவையனைத்தும் ஈடேற எம்மை ஆதரித்திடுவீர்!



X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலைமுன்னணி (புளொட் - ஈரோஸ்)
(1689)

## தமிழ்நாட்டு நீதிமன்றத்தில் தமிழிலே . செயல்பட அனுமதி வேண்டும்

### மத்திய அரசிடம் வழக்கறிஞர்கள் கோரிக்கை

(சென்னை)

தமிழ் நாட்டு நீதிமன்றுகளில் இன்று தொடக்கம் தமிழிலேயே வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று உயர்நீதி மன்றங்களின் தமிழ் மன்றம் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் அறிஞர் அண்ணாவின் நினைவு தின விழாவில் நீதிமன்றங்களின் தமிழ் மன்றச் செயலாளர் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மன்றத்தின் செயலாளர் முத்துக் கிருஷ்ணன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்; 1950 ஆம் ஆண்டு இராஜஸ்தானிலும் 1969 ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச மாநிலத்திலும் அவரவர் மொழிகளில் வழக்குகளை வாதாடுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதேபோன்று தமிழ் நாட்டிலும் தமிழில் உயர்நீதிமன்றங்களில் வழக்குதாக்கல் செய்யப்பட்டு தமிழிலே வாதிட மத்திய அரசு அனுமதிவழங்க வேண்டும் என்று அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (து)

## இலங்கை அரசு தமிழர் உரிமையை மறுத்தமையே ஆயுத போராட்டத்திற்கு வழிவகுத்தது

### வை. கோ. தெரிவிப்பு

(சென்னை)

அரசு தமிழர்களுக்குள்ள உரிமைகளை வழங்க மறுத்து, வன்முறை வழிகளை கையாண்டமையே, தமிழர் ஆயுத வழிமுறையை நாடவேண்டிய நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்தியது.

இவ்வாறு ம. தி. மு. க. பொதுச்செயலர் வை. கோபாலசாமி மதுரையில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

இலங்கை இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர அனைத்து தரப்பினரும் ஒத்துழைத்த போதும், ஆளும் சிங்கள அரசு அதனை மீறிச் செயற்பட்டமையே இன்றைய நிலைக்கு காரணம் என்றார்.

தமிழை ஆட்சி மொழியாக்கக்கோரியும். சேது சமுத்திர திட்டத்தை விரைந்து செயற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தப் போவதாகவும் வை. கோ மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## புதிய திசையில் உறவை வளர்க்கும் இந்திய- அமெரிக்க நாடுகள்

இரு நாடுகளும் புதியதொரு திசையில் உறவுகளை வளர்ப்பதாகவும் அவ்வப் போது சந்தித்துப் பேச வேண்டும் என்று அமெரிக்க அதிபர் பில்கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமரை தனது மாளிகையின் முன் வண்ண மிகு அணிவகுப்பு மரியாதைகளுடன் வரவேற்ற அதிபர் பில்கிளிங்டன் விருந்து உபசாரங்களின் பின் செய்தியாளர் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீண்ட இடைவெளிக்குப் பின் கடந்த மார்ச் மாதம் தான் இந்தியாவிற்குச்சென்றபோது அளிக்கப்பட்ட மகத்தான

### உலக தரிசனம்

வரவேற்பை நினைவு படுத்தி இரு நாடுகளும் அடிக்கடி குறிப்பாக தலைவர்கள் சந்தித்து பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

நிருபர்கள் கேட்ட கேள்வியொன்றிற்கு பதிலளிக்கையில் இருநாடுகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளைக் குறைத்துக் கொள்வதற்கு பரஸ்பரம் புரிந்துணர்வு ஏற்பட்டிருப்பதாகவும் இது மேலும் தொடரும் என்றும் தெரிவித்தார்.

என்னுடைய பதவிக்காலம் ஜனவரியுடன் முடிந்தாலும் இந்திய அமெரிக்க உறவுகள் மேலும் தொடருமென்றும் புதிய தலைவர்களும் இதனைக் கடைப் பிடிப்பார்களென்றும் தெரிவித்தார்.

இந்தியா அணுவாயுதப் பயன்பாட்டைக் குறைப்பதாக உறுதி எடுத்ததைப் பாராட்டிய அதிபர் தென்

### பில்கிளிங்டன்

இழுக்காகிய பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (து)

## கல் அகழ்வுகுவியல் சரிந்து வீழ்ந்ததில் 9 பேர் பலியாகினர்

சட்டவிரோதமாக, முறைகேடாக ஆந்திராவில் கல் அகழ்வு இடம் சரிந்து வீழ்ந்ததில் 9 பேர் துடிதுடித்துப் பலியாகினர்.

ஆந்திர விசாக பட்டிணத்தில் கட்டாரம் கிராமத்தில் முறைகேடாக கல்வெட்டிய பொழுது இந்த கோரச் சம்பவம் நடந்தது.

இதனை ஆந்திர சட்டசபையில் உள்துறை அமைச்சர் தேவேந்திர கவுடா தெரிவித்தார். (து)

## சீனாவில் இடம்பெறவுள்ள செய்தித் தொடர்பு கண்காட்சி

சீனாவின் செய்தித் தொடர்பு கண் காட்சி எதிர் வரும் ஒக்ரோபரில் நடைபெற உள்ளது.

20 நாடுகள் பங்கு பற்றும் செய்தி தொடர்புகளின் கண்காட்சியில் 600க்கு மேற்பட்ட தொழிற் சங்கங்கள் பங்கு பற்ற இருக்கின்றன.

இக் கண் கட்சியில் பொது மக்கள் தொடர்புசெய்திச் சேவை, இணைய தகவல் செய்திச் சேவை, நடமாடும் செய்திச் சேவை, மைக்ரீவியாவுடன் செய்திச் சேவை, இணைய வசதி ஆகியவற்றை கொண்டதாக அமையும் என்று சொல்லப்படுகிறது புத்தாயிரமாண்டுக்கான இக் கண் காட்சி தொடர்ந்து 5 நாட்கள் நடைபெற இருக்கின்றது என்று சீன செய்தித் துறையினர் அறிவித்தனர். (து)

## நிவாரண விநியோகத்தில் பாகுபாடுமக்கள்விசனம்

(ஊர்காவற்றுறை)

இடம்பெயர்ந்தோர்களுக்கு வழங்கப்படும் நிவாரண விநியோகத்தில் பால்மா வழங்குவதில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே வேறுபாடு நிலவுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது வழங்கப்படும் 83 ஏ. பீ. முத்திரைகளுக்கான நிவாரண விநியோகத்திற்கு சில, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் லக்ஸ்பிறே பால் மாவும், வேறுசில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஹைலன்ட் பால் மாவும் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பால்மா விநியோகத்தில் வேறுபாடு காட்டப்படுவதை சம்பந்தப்பட்டவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் தரப்பிலிருந்து கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-75)

## களுத்துறை சிறையில் புலிச் சந்தேக நபர் மரணம்

(கொழும்பு)

பல்வேறுகுற்றங்களின்பேரில் களுத்துறைசிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிச் சந்தேக நபர் ஒருவர் மரணமடைந்திருப்பதாக ஊடகத் தகவல்நிலையம் அறிவித்துள்ளது.

விக்கினேஸ்வரன் சுதர்ஸன் (வயது 40) என்பவரே கடந்த 14 ஆம் திகதி நாகொட வைத்தியசாலையில் மரணமானவராவார்.

மேற்படிகைதி, பலகாலமாக நோயினால் பீடிக்கப்பட்டிருந்ததாகவும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை மரணமானதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேசமயம் மரணமான மேற்படிபுலி சந்தேகநபருக்கு எதிராக கொழும்பு உயர்நீதி மன்றிலும் கல்கிசை மஜிஸ்திரேட் நீதிமன்றிலும் பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## யு.என்.எச்.சீ.ஆர். உதவி

(வடமராட்சிகிழக்கு)

இடம்பெயர்ந்து கரணவாய் மத்தியில் வசித்துவந்தவர்களில் 33 குடும்பங்களுக்கு யு. என். எச். சீ. ஆர் நிறுவனம் இருப்பிடவசதி அமைத்துக் கொடுத்துள்ளது.

இப்பகுதியில், இடம் பெயர்ந்த 45 குடும்பங்கள் வசித்துவந்தபோதிலும், 33 வீடுகள்மட்டுமே மேற்படி நிறுவனத்தினரால் அமைத்துக் கொடுத்திருப்பதுகுறித்து பாதிக்கப்பட்டோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், இருப்பிட வசதிகள் அமைத்துக்கொடுத்தவர்களுக்குரிய மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்காமையினால், மேற்படி மக்கள்தமது இயற்கைக்கடன்களை நிறைவேற்ற அருகிலுள்ள பாடசாலை மலசலகூடத்தையே பயன்படுத்தும் நிலை காணப்படுகிறது. (உ)

## ஐ. தே. கட்சி பிரசாரகூட்டத்தில் பொ.ஐ.ஐ.முன்னணி ஆதரவாளர்தாக்குதல்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சிதேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்ளச்சென்ற பொதுமக்கள்மீது பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் தாக்குதல்நடத்தினர்.

இதனைத் தடுக்கும்வகையில் பொலிஸார், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில்ஒருவர்கொல்லப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது,

கடந்த சனிக்கிழமை மு. ப. 10 00 மணியளவில் வாரியப்பொலபகுதியில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சி பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ளவென ஏராளமானகட்சி ஆதரவாளர்கள் சென்றுகொண்டிருந்தனர்.

அவ்வேளை அங்குவந்த பொதுஜன ஐக்கியமுன்னணி ஆதரவாளர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளச்சென்ற பொதுமக்கள்மீது தாக்குதல்களை மேற்கொண்டதுடன் கட்சியின்கொடிகள், பதாகைகளை சேதமாக்கும்நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் அங்குவந்த பொலிஸார் நிலைமை, கட்டுமீறிச் செல்லவே துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டு, நிலைமையை சமாளிக்க முனைந்தபோது, கசிப்புலால் என்ற கட்சி ஆதரவாளர் கொல்லப்பட்டார்

இதனையடுத்து கலகக்காரர் கலைந்துசென்றனர் கூட்டம் வழமைபோல் இடம் பெற்றது.

இதேசமயம், மேற்படி கூட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புகடமையில்ஈடுபட்டிருந்தனர். (உ)

## கார்-பஸ்விபத்தில் ஐவர்பலி

(கொழும்பு)

களுத்துறை- காலிவீதியில் கடந்தவெள்ளிக்கிழமைஇடம் பெற்ற கார் - பஸ் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஐவர் ஸ்தலத்தில் பலியாகினர்.

திருமண வீடொன்றுக்குச் சென்று விட்டு காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இப்பரிதாபச் சம்பவம் நிகழ்ந்தது.

பலியானவர்களில்பொலிஸ் இன்ஸ்பெக்ரர் ஒருவரும் அவரது மனைவி, மகள் ஆகியோரும் அடங்குவர். (ந)

## ஒரே நாளில் 7பேருக்கு விசர் நாய் கடித்தது

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி பகுதியில் ஒரே நாளில் ஏழு பேர்விசர் நாய்க்கடிக்குள்ளாகியுள்ளனர்.

வீட்டின்வளர்ப்பு நாய்க்கு விசர் ஏற்பட்டமையால், வீட்டுக் காரர் இருவரையும், வேறு ஐவரையும் கடித்ததோடு; கட்டிவைக்கப் பட்டிருந்த ஆட்டையும் தென்னம் பிள்ளை ஒன்றையும் கடித்துக் குதறியுள்ளது.

அண்மைக் காலங்களில் விசர்நாய் கடிக்கிலக்கானோர் தொகை அதிகரித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-49)


## சுயேச்சைக்குழு இல-3

(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்)

சொல்லும் செயலும் ஒன்றெனக் கொள்வோம்

எமதுவாக்குகளை தொலைபேசிக்களித்து துயர்களை வெல்வோம்



(இ-788)

அரியவற்று ளெல்லாம்
அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.
- குறள் -

# வலம்புரி

## முதுமையைப் போற்றுவோம்

இளமையிற் கல் முதுமையில் மண் என்றான் பாரதி. மண் என்னும் சொல்லு மாண்என்பதன் குறுக்கம் போலும். மாண்புடைய அந்தக் காலம் போற்றப்பட வேண்டியதே. முதுமை என்பது எவரது வாழ்விலும் வருவதுண்டு. வாழ்ந்துகளித்த மானிடம் முதுமையைச் சுமையாகக் கொள்ளக் கூடாது. முதுமையைப் பேணவும் போற்றவும் வேண்டும்.

இன்றைக்கு உலகின் வேகத்தில், வாழ்வியலின் கட்டமைப்பில் முதுமைப் பருவத்தினர் துன்பச் சுமையை அடையும்நிலையைச் சற்று அவதானிக்க முடிகிறது. சுற்றம்அறுத்து சுகம் கெட நிற்கும் முதியோர், முதியோர் இல்லங்களில் வாசம் செய்வது கண்கூடு. வசதிபடைத்தவரும் பராமரிப்பாரின்றிப் பொது இடங்களான முதியோர் இல்லங்களில் அடைக்கலம் புகுதல் காலத் தேவையாகிறது.

அண்மையில் கைதடியில் அவலப்பட்ட முதியோரைக் கேள்விப்பட்டிருக்கிறோம். பாரிய செல் சத்தங்களால் கைத்தடி இழந்து, கண்ணீர் மல்கி கடந்த கால வாழ்வின் வனப்பை எண்ணி. ஈன்ற மக்களின் மகோன்னத வாழ்வை அசைபோட்டு, மல்கும் கண்ணீர் மெய்யை நனைத்த உள்ளத்தை உலுக்கிய காட்சி மறக்க முடியாததொன்று. அந்த வேளையில் அக்கறை கொண்டு ஐ. சி. ஆர். சி உலகுதழுவிய தாபனம் உதவியது பாராட்டுக்குரியது. அன்னவரை மூளாயில் ஆறுதல் படுத்தி 120 படுக்கை வாய்ப்புகள் செய்து கொடுத்தனர் போற்ற வேண்டிய விடயம்.

இந்த முதியோர் இருபாலாரும் தத்தமது ஓய்வு நேரங்களை இனிதே கழிக்க நவீன காட்சி இன்பங்களை நுகர வசதி செய்து கொடுக்கச்சிந்தை கொள்ள வேண்டும். அது செம்மை நெறியுமாகும். ஆறளைபெயர்ந்த காலம்; அநாவசிய வார்த்தைகளால் கலகம் விளைவித்து வேதனைப்படாது தொலைக்காட்சிப்பெட்டி இரண்டு அவசிய தேவையாகின்றது. இதற்குவகை செய்ய வள்ளண்மை மிக்க உள்ளங்கள் முன்வர வேண்டும். காரணம் நாமும் வயோதிப நிலையை அடைவோம் அல்லவா?

அன்புடன் ஆசிரியர்

# அமைச்சர் அஷ்ரப் பயணம்செய்தஹெலிகொப்டர்
# வெடிச்சத்தத்தையடுத்து தீப்பிளம்பாக வீழ்ந்தது

### நேரில் கண்டோர் தகவல்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் உட்பட 15பேர் பயணம் செய்த உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளான வேளை, தொடர்ந்து 4 குண்டுச் சத்தங்கள் கேட்டதாக, அப்பிரதேச வாசிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

**தீப்பிளம்பாய் வீழ்ந்தது**

குண்டுச் சத்தங்களை அடுத்து பல முறை கரணமடித்த பின்னர், உலங்கு வானூர்தி நிலத்தை நோக்கி தீப்பிளம்பாய் வீழ்வதை கண்டதாகவும் விபத்து நடந்த இடமான கேகாலை மாவட்ட அரநாயக்கா பிரதேச வாசிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி உலங்கு வானூர்தி பல தடவைகள் கரணமடித்த பின்னர் வீழ்ந்ததன் காரணமாக அது வீழ்ந்து கிடக்கும் பகுதியை அண்டிய சுமார் 100 யார் சுற்றுவட்டாரத்தில் இருந்த மரங்கள் யாவும் தீயல் கருகி நிலத்தில் சாய்ந்துள்ளன.

விபத்து நிகழ்ந்த மலைப் பகுதியில் உலங்கு வானூர்தியின் வாலின் ஒரு பகுதி, மற்றும் அதன் விசிறி தவிர ஏனைய பாகங்கள் எரிந்து சாம்ராகியுள்ளது.

**துண்டிக்கப்பட்ட தலைகள்**

அமைச்சர் அஷ்ரப் மற்றும் மரணமான அனைவரினது தலைகளும் துண்டிக்கப்பட்டு வேறு வேறாக காணப்பட்டமையானது விபத்தின் கோரத் தன்மையை புள்ளியிட்டு காட்டுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்து நடந்தபகுதியின் மலைப்பாங்கான இட அமைவும், விபத்தின் தன்மையினை மேலும் பாராதூரமானதாக்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

**அமைச்சரின் உடல்**

அமைச்சரின் உடல் சின்னாபின்னப்பட்டு சேதத்திற்குள்ளான காரணத்தினால், அவரது உடலை பாராளுமன்ற குழுக்களின் பிரதிநிதி தலைவர்களுள் ஒருவரான ராவூப் ஹக்கீம். அடையாளம் காட்டினார்.

உடல் சிதைந்துபோயுள்ளமையினால் மரணத்தின் பின்னர் தனது உடலை சொந்த இடமான ஒலுவிலில் அடக்கம் செய்யவேண்டும் எனும் அவரது நெடுநாள் ஆசை நிறைவேற்றப்பட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்து மருதூர்கனி கவலை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**இடர்களின் மத்தியில் மீட்புப் பணி**

இதேவேளை உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளான மலைப்பாங்கான அடர்காட்டுப்பகுதிக்கு போக்குவரத்து செய்யக்கூடிய பாதைகள் இல்லாத காரணத்தினால், மீட்பு முயற்சியானர் பல மைல் தூரம் நடந்து சென்று பலத்த கஷ்ரத்தின் மத்தியில் தமது கடமைகளை மேற்கொள்ள வேண்டி இருந்ததாக கூறப்படுகிறது.

எனினும், அமைச்சரின் ஆதரவாளர்கள் அபிமானிகள் என பல தரப்பட்ட ஆயிரக்கணக்கானோர் விபத்து நடந்த இடம் சென்று பார்வையிடத்தவறவில்லை.

**இராணுவத்தினர் முகாம்**

விபத்து நடந்த மலைப் பகுதியில், தற்போது இராணுவத்தினர் முகாமிட்டுத்தங்கியுள்ளனர்.

உடனடியாகவே, அவ்விடம் விரைந்த இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் மேற்கொண்டு சிதைவுகளை சேகரிக்கும் பணியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

**தேடப்படுகிறது**

எனினும் விபத்து தொடர்பான பூரண விபரத்தினை பெறுவதற்கு பெருதவியாக இருக்கும் என கருதப்படும் கறுப்புப்பெட்டி தொடர்ந்தும் தேடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்படும் பட்சத்தில் மேற்படி உலங்கு வானூர்தியின் விபத்துக் குறித்த மேலும் பல தகவல்கள் வெளியாகக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (உ-க)

## அமைச்சர் அஷ்ரப் பலியானதையடுத்து பொத்துவில் பகுதியில் ஊரடங்கு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் அஷ்ரப் விபத்தில் பலியானதையடுத்து, பொத்துவில் பகுதி மக்களிடையே ஏற்பட்ட பதற்றத்தைத் தணிக்கும் வகையில் அங்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொத்துவில் பகுதி பள்ளி வாசல் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு இவ் ஊரடங்கு உத்தரவு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

சனிக்கிழமை மாலை 6 மணி முதல் அமுல்படுத்தப் பட்டிருந்த இவ் ஊரடங்கு, ஞாயிறு காலை 6 மணியுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

எனினும், பதற்றம் தணியும் வரை இதே முறையில் ஊரடங்கு அமுல்படுத்தப் படலாம் எனவும் நம்பப்படுகிறது.

இதேசமயம், அம்பாறைப் பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன், விசேட அதிரடிப் படையினரும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளையில் இப் பகுதிகளில் பெரும் வன்செயல்களோ அன்றி கலகங்களோ ஏற்பட்டதாக நேற்று வரை தகவல் இல்லை (உ)

## யாழ். கல்வி பணிமனையில் 22 ஆம் திகதி அறிவித்தல்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க. பொ. த. (உ/த) பரீட்சையில் புதிய பாடத்திட்டதிற்கு அமைவாக யாழ். வலயத்தில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தாம் தோற்றிய ஒவ்வொரு பாடம்தொடர்பாகவும் ஒப்படைகள் ஆய்வுக்கட்டுரைகள், அறிமுறைசார்சோதனைகள், செயன்முறைசார் சோதனைகள், தனிநபர் செயற்திட்டஅறிக்கை ஆகியவற்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இதுதொடர்பான அறிவுறுத்தல்கூட்டம் யாழ். வலயக் கல்விப்பணிமனையில் (நல்லூர்) 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

யாழ். வலயத்தில் தோற்றிய பின்வரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இவ் வறிவுறுத்தல்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான தனிப்பட்ட கடிதங்களை அவர்களின் சொந்தமுகவரிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

சுமித்திரா சொக்கலிங்கம் 86, குகன்வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்
பாலகிருஸ்ணன் சிவதீபன் 383, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
செல்வநாதன் சிவானந்தன் 383, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
இராஜையா பாலமுரளி 111 பாற்பண்ணைவீதி, துணுக்காய்
செல்வராசா கேசவன் 393/37, கோவில்வீதி, நல்லூர்
நந்தகுமார் காண்டீபன் ஆலடி, ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணியம் ரமேஸ்குமார் 79, சிவன்கோவிலடி திருநெல்வேலி
ஜெயவிக்கிரமன் ஜெயதாஸ் 80, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்
சண்முகநாதன் ஜெயந்தன் 88, யாழ்வீதி, யாழ்ப்பாணம்
சசீந்திரா சிவராஜா 6ம் ஒழுங்கை, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி
அ. கவிதா 27, சிவன் புது வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்
சரவணமுத்து சுகிர்தராஜ் சங்கரப்பிள்ளைவீதி, ஆனைக்கோட்டை,
கவிதா சச்சிதானந்தசிவம், நாகபூசனி அம்மன் வீதி, கொண்டாவில்கிழக்கு,
குணநாயகம் சபாலஷ்மி மாரியம்மன்வீதி, திருநெல்வேலி தெற்கு,
அமுதசுரபி சிறீஸ்கந்தா 89, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்
இபாசினி தேவேந்திரன் பாரதிவீதி, கொண்டாவில் மேற்கு,
மேனகா அருமைநாயகம் 96/1 கண்டிவீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
கேதீஸ்வரதாசன் சத்தியவாணி 75, திருமகள்வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்
கிறிஸ்தோபர் சுபாஜினி 03 யாழ்வீதி, யாழ்ப்பாணம்
காமினி யோகராஜா 600, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் (க)

## யாழ்.போதனா வைத்திய சாலையில் ஏ.ரி.எஸ்.மருந்திற்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் ஏ.ரி.எஸ்.மருந்திற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்பு வலிக்கு ஆளானவருக்கு பயன்படுத்தப்படும் "அன்ரி ரெற்றனஸ் சீரம்" என்ற இம்மருந்து யாழ். போதனாவைத்திய சாலையில் இல்லாததனால் தீவிர சிகிச்சைப் பிரிவில் குடும்பஸ்தர் ஒருவர் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வேறு அத்தியாவசிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இது பற்றி உயர்மட்டத்தினரின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் வைத்திய சாலை வட்டாரத்தில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-12)

## கொழும்பு குண்டுத் தாக்குதலையடுத்து 75 பிச்சைக்காரர்கள் கைது

(கொழும்பு)

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு கண் ஆஸ்பத்திரிக்கு முன்னால் நிகழ்ந்த தற்கொலைக் குண்டுத்தாக்குதலையடுத்து அப்பகுதியைச் சேர்ந்த 75 பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டஅனைத்துப் பிச்சைக்காரர்களும் அம்பாந்தோட்டை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

மேற்படி கண் வைத்திய சாலைக்கு முன்னால்இடம் பெற்ற தாக்குதலில் ஈடுபட்ட தற்கொலைக் குண்டுதாரிஓர் பிச்சைக்காரர் என இனம் காணப்பட்டிருப்பதையடுத்தே இக்கைதுகள் இடம் பெற்றிருப்பதாக கருதப்படுகிறது.

இதேசமயம்,

பிச்சைக்காரர் வேடத்தில் புலிகளின் தற்கொலைப் படையாளிகள் ஊடுருவியிருப்பதாக கிடைத்த தகவல்களின் பேரில், 50 இற்கும் மேற்பட்ட பிச்சைக்காரர்கள் கம்பஹா பகுதியில் அண்மையில் கைது செய்யப்பட்டமையும் தெரிந்ததே. (உ)

**எலும்புக்கூடுகள் மீட்பு**

கிளிநொச்சிவிவேகானந்தா நகரில் நேற்று இரண்டு மனித எலும்பு கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

வீடு ஒன்றின் மலசலக்கூடக் குழியில் இருந்து மீட்கப்பட்ட இவ் எலும்புக்கூடுகள் அடையாளம் காண்பதற்காக கிளிநொச்சி வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாக மேலும்தெரியவருகிறது. (4)

## அஷ்ரப்பின் மரணத்தை தொடர்ந்து தேர்தல் பணிகள் இடைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைச்சர் அஷ்ரப்பின் மரணத்தைத் தொடர்ந்து தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுத் தேர்தல் பிரச்சாரப் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

மூன்றுமுஸ்லிம் வேட்பாளர்களையும், நான்கு தமிழ், ஒரு சிங்கள வேட்பாளரையும் கொண்ட தேசிய ஐக்கிய முன்னணி வேட்பாளர்களில் பெரும் பாலானவர்கள் தேர்தல் களத்தில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த போது முஸ்லிம்காங்கிரஸ் தலைவரின் மரணத்தால் அனைத்து தேர்தல் பணிகளும் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

கொழும்பில் தங்கியிருக்கும் பிரதியமைச்சரும், தேசிய ஐக்கிய முன்னணி தலைமை வேட்பாளருமான எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் மட்டக்களப்பு திரும்பியதும் தேர்தல் பணிகள் ஆரம்பமாகுமென மட்டக்களப்புமாவட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் அலுவலகம் தெரிவித்துள்ளது

(க)

★ விடுதலைப் புலிகளுடன்

# அரசு யுத்தநிறுத்தம் செய்யாது

# தேர்தல் பிரச்சாரத்தில் பிரதமர் உரை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எச்சந்தர்ப்பத்திலும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு யுத்தநிறுத்தம் செய்யமாட்டாது என்று பிரதமர் ரத்தினசிறி விக்கிரமநாயக்கா தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

குருநாகலில் மாரிஸ்தேவா ஆங்கில பாடசாலையில் நேற்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் பிரதமர் தொடர்ந்து பேசுகையில் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டுமென்று ஐக்கியதேசியக் கட்சி பல தடவைகள் கூறிவருகின்ற போதும், அதனை மேற்கொண்டால் தற்போது யுத்த முனைகளில் வெற்றிகளை ஈட்டிவரும் இராணுவத்தினருக்கு அது ஏமாற்றத்தை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

இந்த நாட்டில் பயங்கரவாதம் ஒழித்துக்கட்டப்படும் வரை யுத்தம் நடைபெறும். யுத்தத்தை முடிவுகுக் கொண்டுவந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசு அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

மணலாற்றில் நேற்று இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தின் போது

● ரூபிதரன்
(சின்னத்தம்பி ஜெயக்குமார்)
அம்பாறை

● தேவவரதன்
(அருளம்பலம் - மகாலிங்கம்)
மட்டக்களப்பு

● லவதாசன்
(யோகராசா - பிரகாஷ்)
மட்டக்களப்பு

ஆகிய போராளிகளும் அரியாலை, சாவகச்சேரிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலின் போது

● லெப்டினண்ட்சங்கிலியன்
(இராசேந்திரம் - சபேசன்)
கிளிநொச்சி

● லெப்டினண்ட் சசி
(மாணிக்கம்- ரவீந்திரராசா)
யாழ்ப்பாணம்

● எழில்வேணி
(துரைராசா - சிவகுமாரி)
முல்லைத்தீவு

ஆகியபோராளிகளும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந - 4)

### அஷ்ரப்பின்...

ஹெலிவிபத்தில் உயிரிழந்த அமைச்சரினதும் ஏனையோரினதும் குடும்பங்களுக்கு கூட்டணி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அமைச்சர் அஷ்ரப்பின் இழப்பு ஈடுசெய்ய முடியாதது என்றும் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ. ஆனந்தசங்கரி விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார். (ந-4)

### மோதல்கள்...

தல் தொடுக்குமளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

இந்த மோதல் சம்பவத்தின் முதற்கட்டமாக வரதர் அணியைச் சேர்ந்த சமூன் என்பவர் சுரேஷ் அணியினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க தாக்குதல் சம்பவம் எதிலும் தாம் ஈடுபடவில்லை என, சுரேஷ் அணியின் மாவட்டச் செயலாளர் சிவசக்தி ஆனந்தனும், வரதர் அணியின்வேட்பாளர் நேசன்றஹ்மத்துல்லாவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டத்தில் வரதர்-சுரேஷ் அணிகள் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடுவது வாசகர்கள் அறிந்ததே. (வ)

## ரெலோ பிரச்சாரம்

(யாழ்ப்பாணம்)

புலோலி, நெல்லியடி, கரவெட்டி ஆகிய இடங்களில் ரெலோ அமைப்பின் சுயேட்சைக் குழுவினர் நேற்று பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினர்.

இதில் ரெலோ அமைப்பின் முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம், செ. பத்மநாதன், என். கனகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். [ந]

## திருமதி அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸின் புதிய தலைவர்?

(கொழும்பு)

முஸ்லிம்காங்கிரஸ்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் ஹெலிவிபத்தில் மரணமடைந்ததை அடுத்து அவரது மனைவி திருமதி மர்தூன் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக தெரிவு செய்யப்படலாம் என்று காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

திருமதி அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக தெரிவு செய்யப்படுமிடத்து இலங்கையின் முதலாவது பெண் முஸ்லிம் கட்சித்தலைவர் என்ற பெருமையை இவர் தட்டிக் கொள்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அஷ்ரப்பின் இடத்திற்கு மூஸ்லிம் காங்கிரசின் உப தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவுசெய்யப்படலாம் எனவும் செய்திகள் வெளிவந்துள்ளது.

கட்சியின் புதிய தலைவரை தெரிவு செய்வதற்கான மூஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடத்தின் கூட்டம் நேற்று இரவு கூட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். (வ)

### பங்கர்கள்...

பவரது வீட்டின் வளவிற்குள் அமைக்கப்பட்டிருந்த பங்கர் அழிக்கப்பட்டபோது வீட்டின் முற்பகுதி பலத்த சேதத்திற்குள்ளானதாகவும் அருகாமையில் இருந்த வீடுகளின் கூரை ஓடுகள் சீற்றுகள் யன்னல் கண்ணாடிகள் பலத்த சேதத்திற்குள்ளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### நெருப்பாற்றைக்...

அமைச்சரின் மறைவு இந்நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்ட பேரிழப்பு ஆகும். காலத்தின் தேவை உணர்ந்து கடமையாற்றிய ஒரு பண்பாளனை இந்நாடு இழந்துவிட்டது.

மனித நேயமிக்க, அரசியல்வாதியாக, கவிஞனாக திகழ்ந்த அஷ்ரப் தனது அரசியல் வரலாற்றில் பல நெருப்பாறுகளை கடந்து சாதனை படைத்தார் அவரது இழப்பாலும் விபத்தில் இறந்த ஏனையோரின் இழப்பாலும் ஈ. பி. டி.பி துயரமடைகிறது எனவும் அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

## படப்பிடிப்பாளர் விடுதலை

(கொழும்பு)

கொழும்பு கண் வைத்தியசாலைக்கு முன்பாக கடந்த 15ஆம் திகதி இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலை அடுத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ''தினக்குரல் பத்திரிகை''யின் படப்பிடிப்பாளர் எஸ்,இராமதாஸ் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ந-4)

| 27ஆவது ஒலிம்பிக் போட்டி |
|---|

## சிட்னி,ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்கா முன்னணியில்

(கொழும்பு)

அவுஸ்திரேலியா தலைநகர் சிட்னியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒலிம்பிக் போட்டியின் 2ஆவது நாளான நேற்று வரை அமெரிக்கா 4தங்கம், 5வெள்ளி 2வெண்கலம் என 11பதக்கங்களை பெற்று முன்னணி வகிக்கிறது.

இதேவேளை அவுஸ்திரேலியா 9 பதக்கங்களைப் பெற்று 2ஆவது இடத்தினையும் பிரான்ஸ் 6பதக்கங்களை பெற்று 3ஆவது இடத்தினையும் ஜப்பான் 4பதக்கங்களை பெற்று 4ஆவது இடத்தினையும் வகிக்கிறது.

நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 'ஹொக்கி' ஒலிம்பிக் போட்டியில் இந்தியா ஆஜென்ரீனாவை மூன்றுக்குப் பூச்சியம் என்ற கோல் கணக்கில் முதன் முறையாக வென்றமை குறிப்பிடத்தக்கது. (4)

## அரைக்கம்பத்தில் ஒலிம்பிக் கொடி

(கொழும்பு)

சர்வதேச ஒலிம்பிக் குழுவின் தலைவர் யுவான் அன்ரனியோ சமாஜின் துணைவி நேற்றிரவு காலமானதாகத் தெரிய வருகிறது.

இவரின் மரணத்தை அடுத்து நேற்று சிட்னி விளையாட்டரங்கில் ஒலிம்பிக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (4

## யாழில் எமக்கு ஆதரவு உண்டு 23-ம் திகதி பிரச்சாரம் ஆரம்பம்

### சிஹல உறுமய பிரமுகர்தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.மாவட்ட தேர்தல் களத்தில்போட்டி இடுவதற்கு வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள சிஹல உறுமயக் கட்சி 23ஆம்திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் தனது தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் தமக்கு ஆதரவு இருப்பதாகவும் கொழும்பில் வாழுகின்ற யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களின் குடும்பங்கள் ஆதரவு அளிக்கவிருப்பதாகவும் கட்சியின் முக்கிய உறுப்பினரான உபுல் குணவர்த்தனா தெரிவித்துள்ளார். (வ)

## வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்தது

வடபகுதி பத்திரிகையாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குவதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதாக டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

வடஇலங்கைபத்திரிகையாளர் சங்கம் நேற்று டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தமது அங்கத்தவர்களுக்கு தகவல் தொடர்பு திணைக்களத்தினால் அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்என்பதுஉட்படபலகோரிக்கைகளை முன்வைத்தனர் இதற்கு பதிலளித்த டக்ளஸ் தாம் உடனடியாக தகவல் தொடர்புபணிப்பாளர் ஆரியரூபசிங்காவுடன் தொடர்பு கொண்டுஅடையாளஅட்டை வழங்கநடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். [ந]

### புலிகள்...

காமம் இராணுவத்தளங்களிலிருந்து ஏவப்படும் பல்குழல் பீரங்கிகளின் உதவிகளுடன் இராணுவம் தனது படைநகர்வை ஆரம்பித்துள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் உள்ள பகுதிகளை இராணுவம் மீட்பதற்கு மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளின் போது இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையேஏற்பட்டுள்ளகடுமையான சண்டையை அடுத்து சாவகச்சேரிப் பகுதியை புலிகளிடம் இருந்து கைப்பற்றியதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளது.

அதேவேளை இப்பகுதியில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் கடும் சமர் நடைபெறுவதாகவும் ''புலிகளின் குரல்'' செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை சாவகச்சேரிப் பகுதியை மூன்று மணி நேர சமரின்பின் கைப்பற்றப்பட்டு விட்டதாகவும் அரச வானொலி அறிவித்துள்ளது.

சாவகச்சேரிப் பகுதி, பல்குழல் பீரங்கித்தாக்குதல்களினாலும் எறிகணை,விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களினாலும் ஒரே புகைமண்டலமாக காட்சி அளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இச் செய்தி எழுதும்வரைசண்டைமேலும் தொடர்வதாகவும், சரமாரியான குண்டுச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டவண்ணம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)


எப்ப வரும் மாமா?..
சமாதானம் எப்ப வரும் மாமா?..
அப்போ நாங்கள் எம் தெருவில் இறங்கி
மணல் வீடு கட்டி மகிழ்ந்திடுவோமே!
எம் சிறார்களின் ஏக்கம் தீர..
ஈ. பி. டி. பியை ஆதரிப்பீர்.

(ஈ. பி. டி. பி)

வீணையே உங்கள் இன்னம்! சேவையே எங்கள் எண்ணம்!



X

(இ/736)

இன்று வரை ஈ. பி.டி. பி. ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களாக 191பேர்நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்கள்.


இப்பத்திரிகை ''வலம்புரி'' அச் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.